<u>தளி ஊராட்சி ஒன்றியம், தளி ஊராட்சி மன்ற தலைவர், அவர்களின்</u>
<u>நடவடிக்கைகள்</u>
முன்னிலை: திரு. டி.எஸ்.சுனில்குமார்
மனை வரைபட அனுமதி எண். 01/2023-24, நாள்.23.02.2024
மன்றத்தீர்மானம் எண். 04/2024, நாள்.05.02.2024

பொருள்: மனைப்பிரிவு வரைபட அனுமதி - கிருஷ்ணகிரி மாவட்டம் - தேன்கனிகோட்டை வட்டம் - தளி ஊராட்சி ஒன்றியம் - தளி ஊராட்சி மற்றும் வருவாய் கிராமம், சர்வே எண்கள்: 236/1, 236/2 மற்றும் 641, 642-ல் 3.27.00 ஹெக்டேர் நிலத்தின் உரிமையாளர் திரு. கோபிநாத் மற்றும் ஸ்ரீனிவாஸ், என்பவரின் - மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.255, ஊராக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள்.18.08.1997.
2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இயக்குநர் ஊரக வளர்ச்சித்துறை சென்னை அவர்களின் நே.மு.க.எண். 13219/07DRP/PCA, நாள். 14.02.1997.
3. துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஒசூர் இணையதள விண்ணப்பம் எண் : RSHJCJJU நகர் ஊரமைப்பு ஒப்புதல் எண்.34/2023, நாள்.04.03.2023.
4. திரு. கோபிநாத் மற்றும் ஸ்ரீனிவாஸ், கிருஷ்ணகிரி என்பவரின் விண்ணப்பம் நாள்.06.12.2023.

****

<u>உத்தரவு</u>

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிகோட்டை வட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், தளி ஊராட்சி மற்றும் வருவாய் கிராமம் சர்வே எண்கள் 236/1, 236/2 மற்றும் 641, 642-ல் 3.27.00 ஹெக்டேர் நிலத்தின் உரிமையாளர் திரு.கோபிநாத் மற்றும் ஸ்ரீனிவாஸ், என்பவரின் மனைப்பிரிவு ஒப்புதல் கீழ்காணும் நிபந்தனைகளுடன் வரைபடம் ஒப்புதல் அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனை</u>

1. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறே மனைகள் அமைய வேண்டும். எனவே மாறுதல்கள் செய்யவோ அளவீடுகள் மாற்றம் செய்யவோ கூடாது. தவறும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தங்களின் மனைப்பிரிவு வரைபடத்தின் அனுதி இரத்து செய்யப்படும்.

2. மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் கழிவு நீருக்கென தனியே உறிஞ்சுக்குழிகள் (Soak pit) தனியே அமைக்கப்பட்டு தனியாக வடிகால் கட்டிவிடப்பட வேண்டும்.

(தி.பி.பா)

3.மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டிடம் கட்டும் போது சாதாரணமான முறையில் செப்டிக் டேங்க் வசதிகள் ஊராட்சியின் கழிவு நீர் வடிகாலுடன் நேரடியாக இணைக்கப்பட வேண்டும்.

4.மனைப்பிரிவு அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் தேவையான அளவிற்கு வடிகால் வசதிகள் தரமான கட்டுமானம் கொண்டு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5.மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஊராட்சி அல்லது அரசு புறம்போக்கு நிலங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. அவ்வாறு ஏதாவது ஊராட்சி நிர்வாகத்திற்கு தெரியும் பட்சத்தில் தங்களின் மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி ரத்து செய்யப்படுவதுடன் தங்களின் மீது அரசு விதி முறைப்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6.மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டமைப்புக்கேற்ப மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.

7.மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் தெருமின் விளக்கு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

8.மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் குடிநீருக்கென தனியாக ஆழ்துளை கிணறு அமைத்து அனைத்து மனைகளுக்கும் குடிநீர் இணைப்பு தர வேண்டும்.

9.மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் சுற்றி பலன் தரும் மரங்கள் மற்றும் செடிகள் அதிக அளவில் வைக்கப்பட வேண்டும்.

10.மனைப்பிரிவு ஒப்புதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது உபயோக இடங்கள் மற்றும் உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்கள் யாவும் தலைவர் பேரிகை வருவாய் கிராமம் என்னும் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு (Sub-Division) செய்து தரப்பட வேண்டும்.

5.துணை இயக்கநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஒசூர் இணையதள விண்ணப்பம் எண்: RSHJCJJU, நகர் ஊரமைப்பு ஒப்புதல் எண்:34/2023, நாள். 04.03.2023-ல் சிறப்பு நிபந்தனை வ.எண்.5-ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு கூராய்வு கட்டணம் ரூ.1,70,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஏழுபதுாயிரம் மட்டும்) நாள்.22.02.2024 அன்று ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.1,21,200.00/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தொன்றாயித்தி இாரனுறு மட்டும்) Echallan No.20240212010247 நாள்-12.02.2024-ன் படி அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

இணைப்பு: மனுதாரருக்கான வரைபடம்

இப்படிக்கு

PRESIDENT
THALLY PANCHAYAT
Thally Panchayat Union

தலைவர்,
தளி ஊராட்சி
தளி ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்:

1.Mr.Gopinath,
2.Mr.Srinivas,
No.09, 1st Floor, Samruthi Nilaya,
SVM School Road, Maruthi Layout
Anekal Town & Taluk,
Bangalore-560 106.